# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

பாடம் 7

## வேதத்தை செயல்முறைப்படுத்துதல்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

அவசியம் ........ 4

இணைப்புகள் ........ 7

**தேவன்** ........ 7

நித்திய ஆலோசனை ........ 9

குணம் ........ 10

உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் ........ 11

**உலகம்** ........ 12

**மக்கள்** ........ 13

பாவமான சாயல்கள் ........ 14

சமயப் பிரிவுகள் ........ 15

வகுப்புகள் ........ 16

முன்னேற்றங்கள் ........ 18

**சகாப்த பரிசீலனைகள்** ........ 18

**கலாச்சார முன்னேற்றம்** ........ 21

**தனிப்பட்ட முன்னேற்றங்கள்** ........ 23

முடிவுரை ........ 24





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

சாதாரண வாழ்க்கையில் சில விஷயங்களை தற்காலிக பயன்பாட்டிற்காகவும், சிலவற்றை மிக நீண்ட கால பயன்பாட்டிற்காகவும் எழுதுவது நமது வழக்கம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு, ஒருபோதும் காலாவதியாகாத ஒரு புத்தகம் நிச்சயமாக உள்ளது. அது தான் வேதாகமம் ஆகும். தலைமுறை தலைமுறையாக, தேவனுடைய ஜனங்கள் வேதவாக்கியங்களைப் போற்றியிருக்கிறார்கள். நாமும் அதையே செய்ய வேண்டும், ஏனென்றால் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு யுகத்திலும் தேவனுக்காக வாழ்வதைப் பற்றி வேதம் நிறைய கூறுகிறது. இயேசு வேதத்தை தேவனுடைய வார்த்தையாகப் பார்த்தார், அது எல்லாவற்றையும் நிறைவேற்றும் வரை தேவனுடைய மக்களுக்கு அளவுகோலாக இருக்கும். அவரைப் பின்பற்றுபவர்களாகிய நாமும் அதையே செய்கிறோம்.

இது *அவர் நமக்கு வேதம் கொடுத்தார்: வியாக்கியானம் செய்வதன் அடிப்படைகள்* என்கிற நமது தொடரில் ஏழாவது பாடமாகும். அதற்கு *"வேதத்தை செயல்முறைப்படுத்துதல்"* என்று பெயரிட்டுள்ளோம். இந்த பாடத்தில், வேதாகமத்தின் அசல் அர்த்தத்தை நவீன வாசகர்களுக்கு பொருத்தமானதாக மாற்றுவதில் மிகவும் பயனுள்ள பயன்பாட்டிற்கான சில அணுகுமுறைகளை நாம் பரிந்துரைப்போம்.

இந்த தொடரில், பயன்பாட்டின் செயல்முறையை பின்வருமாறு வரையறுப்போம்:

> ஒரு வேதாகம ஆவணத்தின் அசல் அர்த்தத்தை அவர்களின் கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளை பாதிக்கும் வழிகளில் பொருத்தமாக தற்கால வாசகர்களுடன் இணைப்பதாகும்.

இந்த வரையறை மூல அர்த்தத்தின் நம்முடைய முந்தைய வரையறையைப் பயன்படுத்துவதால், பின்வருவது தான் மூல அர்த்தம் என்பதை நினைவில் கொள்வது உதவியாக இருக்கும்.

> தெய்வீக மற்றும் மனித எழுத்தாளர்கள் கூட்டாக உருவாக்கிய கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆவணத்தை அதன் முதல் வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்பின.

ஆசிரியர் உண்மையிலேயே என்ன சொன்னார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும், பின்னர் நாம் செயல்முறைப்படுத்தலாம். பயன்பாடு வேத பகுதியின் அர்த்தத்திலிருந்து வந்திருக்க வேண்டும், மேலும் நம்மால் முடிந்தவரை மூல அர்த்தத்தை அறிந்துகொள்வது நமக்குப் புரிந்துகொள்ள உதவுகிறது, முதல் வாசகர்களைப் போலவே நமக்கும் அதே இறையியல் அறிவு இருக்கிறதா? நாம் மோசேயின் உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோமா? நாம் ஒரு குறிப்பிட்ட உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோமா? எனவே, அசல் அமைப்பு, வரலாறு, இறையியல் மற்றும் சூழல் ஆகியவற்றைப் புரிந்துகொள்வது அதை சரியாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. நாம் இப்போது கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட கிரியையின் கீழ் இருப்பதால் கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட கிரியையின் வழியாக அந்த அர்த்தத்தைக் கொண்டுவர வேண்டுமா என்பதை நாம் இப்போது அறிவோம்.

– Dr. ஸ்டீஃபன் ஜே. ப்ராமர்

பயன்பாட்டின் செயல்முறை எப்போதும் எளிதானது அல்ல, ஏனென்றால் வேதம் எழுதப்பட்ட காலத்திற்கும் நமது நாளுக்கும் இடையில் நடந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நாம் கணக்கிட வேண்டும். ஆனால் பயன்பாட்டு செயல்முறையின் குறிக்கோள் வேதாகமம் முதன்முதலில் எழுதப்பட்டபோது இருந்ததைப் போலவே இப்போதும் உள்ளது: தேவனுடைய சித்தத்தின்படி தேவனுடைய மக்களின் கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளைப் பாதிக்க வேண்டும் என்பதே குறிக்கோளாகும்.

மூல அர்த்தத்திற்கும் பயன்பாட்டிற்கும் இடையில் நாம் செய்யக்கூடிய மிக முக்கியமான வேறுபாடு என்னவென்றால், மூல அர்த்தத்தைப் பற்றிய நமது தேடுதலானது வேதாகமம் அதன் முதல் வாசகர்களின் கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளில் ஏற்படுத்தும் தாக்கத்தில் கவனம் செலுத்துகிறது என்பதே. ஆனால் பயன்பாட்டின் விளக்க செயல்முறை இந்த அனைத்து நிலைகளிலும் நவீன வாசகர்கள் எவ்வாறு தாக்கத்திற்குள்ளாக வேண்டும் என்பதில் தொடர்புடையது.

வேத பகுதியின் அசல் அர்த்தம் நமது பயன்பாட்டிற்கு முக்கியமானது, ஏனெனில் இது வேத பகுதியின் ஏவப்பட்ட மற்றும் அதிகாரப்பூர்வ அர்த்தமாகும். எனவே, ஒரு வேத பகுதியின் சரியான நவீன பயன்பாடு எப்போதும் அதன் அசல் அர்த்தத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும். அதே நேரத்தில், நமது

நவீன பயன்பாடுகள் ஏதோ ஒரு அர்த்தத்தில் அசல் அர்த்தத்திற்கு அப்பால் செல்ல வேண்டும், ஏனெனில் அவை நவீன காலம், கலாச்சாரங்கள் மற்றும் தனிநபர்களை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

> ஒரு வேதப் பகுதியின் அசல் அர்த்தத்தை அறிந்துகொள்வது அதை நம் சொந்த வாழ்க்கையில் பயன்படுத்த உதவுகிறது. ஏனென்றால், அதன் அசல் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது என்பது அதன் அசல் நோக்கத்தைப் புரிந்துகொள்வதாகும், அதாவது, தேவன் அந்த வேத பகுதியை அதன் முதல் வாசகர்**கள்**, அவர்களின் சூழ்நிலை மற்றும் சோதனைகளின் வெளிச்சத்தில், அந்த நேரத்தில் அவர்கள் எவ்வளவு வேதவசனத்தை அறிந்திருந்தார்கள் அல்லது அணுகினார்கள் என்பதைப் புரிந்துகொள்வதாகும். இதுவே தேவன் அவர்களுக்கு அளித்த பயன்பாடாகும். அதன் அர்த்தம் உண்மையில் அவருடைய பரிசுத்த ஆவியின் பரிசுத்த நோக்கத்தை அவர்களின் வாழ்க்கையில் நிறைவேற்றுவதாகும். அவர்களுடைய வாழ்க்கையில் ஆவியின் நோக்கம் நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் நோக்கத்தின் தொடர்ச்சியில் உள்ளது. ஆகவே, அவர்களுடைய சூழ்நிலையையும், தேவையையும், தேவன் எந்த நோக்கத்திற்காக அந்த வேத பகுதியை மூல அமைப்பிலும் அசல் வாசகர்களுக்கும் கொடுத்தார் என்பதையும் பற்றிய நமது புரிதலானது அந்த வேத பகுதியை ஆவியானவர் நம் வாழ்க்கையில், நமது சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுத்த விரும்புகிறார் என்பதற்கான பாதையை அமைக்கிறது. போதகர்களாக, பிரசங்கியார்களாக நாம் வேத பகுதியைப் பயன்படுத்தும் விதத்தில் அதுதான் நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த தேவன் எப்படி விரும்பினார் என்றும், பின்னர் இன்று கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக நம்மை மேலும் மேலும் மாற வைப்பதில் பரிசுத்த ஆவியின் நோக்கத்தில் அது எவ்வாறு நுழைகிறது? என்றும் நாம் கேட்கிறோம்.
>
> – Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

செயல்முறைப்படுத்துதல் பற்றிய நமது விவாதம் மூன்று காரியங்களைத் தொடும்: முதலில், பயன்பாட்டின் அவசியத்தை கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, பயன்பாட்டை சாத்தியமாக்கும் அசல் அர்த்தத்திற்கும் நவீன

வாசகர்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வோம். மூன்றாவதாக, வேதம் எழுதப்பட்ட காலத்திற்கும் இன்றைய வாழ்க்கைக்கும் இடையில் நடந்த சில முக்கிய முன்னேற்றங்களைப் பார்ப்போம். பயன்பாட்டின் அவசியத்திலிருந்து தொடங்குவோம்.

# அவசியம்

யாக்கோபு 1:21-25-ல் பயன்பாட்டின் அவசியத்தைப் பற்றி யாக்கோபு எவ்வாறு பேசினார் என்பதைக் கவனியுங்கள்:

> ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக்கோபு 1:21-25).

வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை அறிந்தால் மட்டும் போதாது என்று யாக்கோபு போதித்தார். வேதாகமத்திலிருந்து சரியாகப் பயனடைய வேண்டுமென்றால், நாம் அதினால் தாக்கத்திற்கு உள்ளாக வேண்டும்; நமது கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகள் மாற்றப்பட வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற விரும்பினால் ஒவ்வொரு விசுவாசிக்கும் இது போன்ற பயன்பாடு முற்றிலும் அவசியம். ஆனால் பயன்பாட்டின் இந்த முடிவுக்கு வழிவகுக்கும் செயல்முறை என்ன? நமது கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகள் எவ்வாறு பாதிக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க முயற்சி செய்வது உண்மையில் அவசியமா?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வேதவாக்கியங்களை பொருத்தமானதாகவும் பொருந்தக்கூடியதாகவும் மாற்றுவதற்கான சிறந்த வழியானது வேதாகமத்தின் மதிப்புகள், அல்லது வேதாகமத்தின் போதனை அல்லது வேதாகமத்தின் இறையியல் ஒருவரின் அன்றாட வாழ்க்கைக்கு எந்தச் சூழலில் பொருந்தும் என்பதைப் பற்றி சிந்திப்பதாகும். இது நான் கையாளும் வேத பகுதியைப் பொறுத்தது, ஆனால் தேவனைப் பற்றியும், நம் அயலாரைப் பற்றியும் நாம் சிந்திக்கும் விதம், நான் காட்ட வேண்டிய இரக்கத்தின் வகை மற்றும் நான் எப்படி வாழ வேண்டும் என்கிற காரியங்களைப் பற்றிய அணுகுமுறைகள் வேதத்தில் உள்ளன. அந்த மதிப்புகள் மிகவும் முக்கியமானவை. வேதத்தை ஒரு வரலாற்று நூலாகவோ அல்லது அதன் இறையியலின் அடிப்படையில் ஒரு சுருக்கமாகவோ நாம் படிக்க நினைத்து, அந்த பகுதி நம்மை என்ன செய்ய அழைக்கிறது என்பதற்கான நெறிமுறை பரிமாணத்தை சேர்க்காதபோது அங்கே ஒரு பிரச்சனை உள்ளது என்று நான் நினைக்கிறேன். ஆனால் வேதாகமத்தின் தொடர்பு சார்ந்த மற்றும் நெறிமுறைப் பரிமாணத்தை நாம் கருத்தில் கொண்டால், நாம் வாழும் விதத்தைப் பற்றி இன்னும் உணர்திறனுடன் சிந்திக்க நம்மை அழைக்கும் ஒரு பயன்பாட்டை எந்த வேத பகுதியும் கொண்டிருக்கும்.
>
> – Dr. டாரல் எல்.பாக்

1 கொரிந்தியர் 10:11-ல் பவுல் இந்த வார்த்தைகளைக் கொண்டு தற்கால பயன்பாட்டைத் தேடுவதன் முக்கியத்துவத்தை விளக்கினார்:

> இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது (1 கொரிந்தியர் 10:11).

இந்த அதிகாரத்தின் பின்னணியில், தேவனுக்கு எதிராக கலகம் செய்ததால் யாத்திராகமத்தின் இஸ்ரவேலர்கள் அனுபவித்த நியாயத்தீர்ப்புகளைப் பற்றிய கதைகளை யாத்திராகமம் மற்றும் எண்ணாகமம் புத்தகங்கள் கூறுகின்றன என்பதை பவுல் கொரிந்தியர்களுக்கு நினைவூட்டினார். இந்த வசனத்தில், கொரிந்துவில் உள்ள சபைக்கு இந்த கதைகளைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை அவர் எடுத்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய ஏற்பாட்டுக் கதைகளை பவுல் புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்குக் கொண்டுவந்து அசல் வாசகர்களுக்கும் அவரது கொரிந்திய வாசகர்களுக்கும் இடையிலான தொடர்புகள் அல்லது தொடர்ச்சிகளை கணக்கில் எடுத்துக்கொள்வதன் மூலமும், மோசேயின் காலத்திற்கும் அவரது நாளுக்கும் இடையில் நடந்த முன்னேற்றங்கள் அல்லது மாற்றங்களைக் கருத்தில் கொண்டும் பயன்பாடு செய்தார்.

ஒருபுறம், இந்த கதைகள் ”நமக்கு எச்சரிக்கையாக எழுதப்பட்டன” என்று வலியுறுத்துவதன் மூலம் பவுல் இரண்டு வாசகர்களையும் இணைத்தார். இந்த இணைப்பை ஏற்படுத்துவது பவுலுக்கு கடினமாக இருக்கவில்லை. யாத்திராகமமும் எண்ணாகமமும் முதலில் எகிப்திலிருந்து வந்த இஸ்ரவேலர்களின் இரண்டாம் தலைமுறையினருக்காக எழுதப்பட்டன. முதல் தலைமுறையின் தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது என்று எச்சரிக்கவே அவை எழுதப்பட்டன. எனவே, கொரிந்து திருச்சபை தோல்வியின் அபாயத்தில் இருந்ததால் பவுல் முதலில் கொரிந்தியர்களுக்கும் அசல் வாசகர்களுக்கும் இடையிலான ஒற்றுமையில் கவனம் செலுத்தினார். எனவே அசல் வாசகர்களை எச்சரித்தது போலவே இந்த கதைகளும் அவர்களை எச்சரித்தன.

மறுபுறம், மோசேயின் காலத்திலிருந்து நடந்த முக்கியமான முன்னேற்றங்களைக் குறிப்பிட்டு பவுல் தனது செயல்முறைப்படுத்தலுக்கு தகுதி பெற்றார். தோல்விகள் முதல் தலைமுறை இஸ்ரவேலர்களுக்கு நிகழ்ந்தன, ஆனால் அவை பவுலின் வாசகர்களுக்காகவும் மற்ற விசுவாசிகளுக்காகவும் எழுதப்பட்டன. பழைய ஏற்பாட்டு அனுபவங்களை ”உலகத்தின் முடிவு காலத்திலுள்ள” திருச்சபைக்கு எடுத்துக்காட்டுகளாகவும், எச்சரிக்கைகளாகவும் வேதாகமப் பதிவு மாற்றியது.

”இந்த உலகத்தின் முடிவு காலம்” என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் புதிய ஏற்பாட்டின் காலத்தை பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்து வேறுபடுத்திய பல வழிகளில் ஒன்றாகும். இந்த வார்த்தைகளால், யாத்திராகமம் மற்றும் எண்ணாகமத்தின் அசல் வாசகர்களுக்கு இல்லாத மறுசீரமைப்பு வரலாற்றின் முன்னேற்றங்களின் நன்மைகள் கொரிந்தியர்களுக்கு இருந்தன என்பதை பவுல் ஒப்புக்கொண்டார். கொரிந்தியர்கள் மோசேயிலிருந்து 1,000 ஆண்டுகளுக்குப் பிறகு வாழ்ந்தனர். அவர்கள் அசல் வாசகர்களைப் போல எகிப்திலிருந்து கானான் நோக்கிப் பயணம் செய்யவில்லை; அவர்கள் புதிய வானத்தையும் புதிய பூமியையும் நோக்கிய பயணத்தில் இருந்தார்கள். இந்த உலகத்தின் முடிவு அவர்கள் மீது வந்துவிட்டது. இதன் விளைவாக, கொரிந்தியர்களுக்கான பவுலின் பயன்பாடானது அந்த முன்னேற்றங்களுக்குக் கணக்கிட வேண்டியிருந்தது. இந்த வேறுபாடுகளை பவுல் 1 கொரிந்தியர் 10 இன் எஞ்சிய பகுதி முழுவதும் எடுத்துரைத்தார், அங்கு கொரிந்தியர்கள் தங்கள் தனிப்பட்ட கிறிஸ்தவ



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாழ்க்கையிலோ அல்லது தங்கள் சபையில் தங்கள் உறவுகளிலோ தோல்வியடையக்கூடாது என்று எச்சரித்தார்.

பழைய ஏற்பாட்டு புத்தகங்களான யாத்திராகமம் மற்றும் எண்ணாகமத்தை பவுல் கொரிந்துவில் உள்ள கிறிஸ்தவர்களுக்குப் பயன்படுத்துவது, நாம் ஒவ்வொரு முறையும் வேதவாக்கியங்களைப் பயன்படுத்தும்போது நடக்கும் அடிப்படை செயல்முறையைப் பிரதிபலிக்கிறது. பயன்பாடு எப்போதும் அசல் மற்றும் நவீன வாசகர்களுக்கு இடையிலான தொடர்புகள் மற்றும் அவர்களுக்கிடையே நடந்த வளர்ச்சிகள் இரண்டையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். வேதாகமத்தின் பொருத்தமான பயன்பாடுகளை இன்று நம் வாழ்க்கையில் செய்ய வேண்டுமானால், இந்த தொடர்புகளையும் அவைகளின் முன்னேற்றங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இப்போது பயன்பாட்டின் அவசியத்தை நாம் கண்டோம், வேதாகம புத்தகங்களின் அசல் வாசகர்களுக்கும் நவீன வாசகர்களுக்கும் இடையிலான பல தொடர்புகள் அல்லது தொடர்ச்சிகளில் நம் கவனத்தை திருப்புவோம்.

# இணைப்புகள்

பண்டைய மற்றும் நவீன வாசகர்களுக்கு இடையிலான தொடர்புகள் அல்லது தொடர்ச்சிகள் தான் வேத பகுதிகளை நவீன மக்களுக்கு பொருத்தமானதாக ஆக்குகின்றன. இந்த தொடர்ச்சிகளை விவரிக்க எண்ணற்ற வழிகள் உள்ளன.

இந்த பாடத்தில், இந்த இணைப்புகளை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிப்போம். முதலில், இரண்டு வாசகர்களுக்கும் ஒரே தேவன் இருப்பதைக் காண்போம். இரண்டாவதாக, அவர்கள் ஒரே மாதிரியான உலகில் வாழ்கிறார்கள். மூன்றாவதாக, அவர்கள் ஒரே வகையான மக்களாக இருக்கிறார்கள். இரண்டு வாசகர்களுக்கும் ஒரே தேவன் இருக்கிறார் என்பதில் தொடங்கி, இந்த வகைகள் ஒவ்வொன்றையும் பார்ப்போம்.

## தேவன்

வேதாகமத்தின் வாசகர்கள் அனைவரும் தங்கள் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் செலுத்த வேண்டிய ஒரே ஒரு தேவன் மட்டுமே இருக்கிறார் என்பதை வேதவாக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன. பாரம்பரிய கிறிஸ்தவ இறையியல் கற்பிப்பது போல, தேவன் மாறாதவராக இருக்கிறார், அதாவது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர் மாறுவதில்லை. தேவன் மாறாதவர் என்பதாலும், அவருக்கு விசுவாசமும் கீழ்ப்படிதலும் அவருக்கு செய்ய வேண்டிய உலகளாவிய கடமைகள் என்பதாலும், வேதாகமம் அதன் அசல் வாசகர்கள் மீதும் அதன் நவீன வாசகர்கள் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்திற்கு இடையே வலுவான தொடர்புகள் உள்ளன.

> தேவன் மாறாதவர் என்பதற்கு, அவர் **தம**து இருப்பு, பரிபூரணங்கள், நோக்கங்கள் மற்றும் வாக்குத்தத்தங்களில் மாறாதவர் என்று அர்த்தமாகும். எனவே அவரது இருப்பு, அவரது இயல்பு, அவரது சாராம்சம், அவரது பரிபூரணங்கள், குணாதிசயங்கள், அவரது நோக்கங்கள், அவர் என்ன செய்ய தீர்மானித்துள்ளார், அவரது வாக்குத்தத்தங்கள் மாறாதவை**களா**க இருக்கின்றன. எனவே தேவன் அந்த வழிகளில் மாறாதவர். தேவன் நம்முடன் ஒரு துடிப்பான, உறவுமுறை மற்றும் தனிப்பட்ட வழியில் தொடர்பு கொள்ள முடியாது என்பது இதன் அர்த்தம் கிடையாது. அவர் நம்முடைய ஜெபங்களுக்குச் செவிகொடுக்கிறார், நம்முடைய பாவத்தைக்குறித்து வருத்தப்படுகிறார், நம்முடைய நேர்மையில் மகிழ்ச்சியடைகிறார். எனவே தேவன் அடிப்படையில் மாறாதவர், ஆனால் உறவு ரீதியாக மாறக்கூடியவர் என்று கூறப்படுகிறது. அவருடனான நமது உறவுக்கு ஏற்ப அவர் என்ன செய்கிறார் என்பதை அவர் மாற்றியமைக்கிறார், அதே நேரத்தில் அவரது அத்தியாவசிய பண்புகளை பராமரிக்கிறார்.
>
> – Dr. கே. எரிக் தோனேஸ்

> தேவனுடைய பல முக்கிய பண்புகளில் ஒன்றான திரித்துவமானது, மாறாத தன்மையாகும். இந்த வார்த்தையை நீங்கள் பல இறையியல் வேத பகுதிகளில் காணலாம். மாறாத தன்மை என்பது "மாறாதது" என்று பொருள்படும் . இது உண்மையில் அற்புதமான செய்தியாகும், ஏனென்றால் நம் வாழ்க்கையில், நம் உலகில், நமது உறவுகளில் மற்றும் நமது சொந்த விரைவான வாழ்க்கையில் உள்ள அனைத்தும் நிரந்ததரமற்றதும் குறுகிய காலம் கொண்டதுமாயிருக்கின்றன என்பது பற்றி நாம் மிகவும் அறிந்திருக்கிறோம். தேவனைப் பற்றிய அந்த விவரிப்பாளரை ஒரு திருப்புமுனை பிரபஞ்சத்தின் நிலையான புள்ளியாக நான் கருதுகிறேன். நேற்றும்

> இன்றும் என்றென்றும் மாறாமல் இருக்கும் தேவனுடைய தரிசனத்திற்கு நம் அமைதியற்ற ஆத்துமாக்களை ஈர்ப்பது எது? மலைகள் குலுங்கும்போதும், அனைத்தும் கடலில் விழுவது போல் தோன்றும்போது, பாறை போல திடமான, நம்பகமான, ஆத்துமாவுக்கு நங்கூரமாக செயல்படக்கூடியதாக இருக்கும் அவர் தான் நம் அனைவருக்கும் இருக்கும் இந்த ஆழ்ந்த உளவியல் மற்றும் ஆவிக்குரிய தேவை என்று நான் நினைக்கிறேன்… இந்த மாறாத தேவனிடம் நமது பலம் இருக்கிறது.
>
> – Dr. கிளென் ஸ்கார்கி

தெய்வீக மாறாத தன்மை பற்றிய வேதாகமக் கருத்தானது தேவன் செயலற்றவர் என்பதைக் குறிக்கவில்லை. வேதாகம சொற்களில், செயலற்ற தேவன் ஒரு பயனற்ற சிலையாகும். ஆனால் வேதாகமத்தின் தேவன் தனது சிருஷ்டிப்புடன் உண்மையான மற்றும் அர்த்தமுள்ள வழிகளில் தொடர்ந்து தொடர்புகொள்கிறார்.

தேவனுடைய மாறாத தன்மைக்கு மூன்று முக்கியமான அம்சங்கள் உள்ளன என்று பாரம்பரிய கிறிஸ்தவ இறையியல் சரியாக வலியுறுத்தியுள்ளது. முதலாவதாக, தேவனுடைய நித்திய ஆலோசனை அல்லது வரலாற்றிற்கான இறுதித் திட்டம் மாறாதது.

## நித்திய ஆலோசனை

வெவ்வேறு கிறிஸ்தவ மரபுகள் தேவனுடைய நித்திய திட்டத்தை வித்தியாசமாக புரிந்து கொண்டாலும், தேவன் செய்த, செய்யும், செய்யவிருக்கும் அனைத்தும் ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும். தேவனுக்கு எல்லாம் தெரியும், அந்த அறிவைப் பயன்படுத்தி வரலாற்றை அவர் எந்த நோக்கத்திற்காகப் படைத்தாரோ அந்த இலக்கை நோக்கி வழிநடத்துகிறார். ஏசாயா 46:10-ல் தேவன் இவ்வாறு கூறுகிறார்:

> அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் (ஏசாயா 46:10).

பவுல் எபேசியர் 1:4, 11-ல் இவ்வாறு விளக்குகிறார்:

> தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய

> தீர்மானத்தின்படியே, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார் (எபேசியர் 1:4, 11).

எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு திட்டம் தேவனிடம் உள்ளது என்பதை பவுல் தெளிவுபடுத்தினார். இந்த திட்டம் அவர் விசுவாசிகளை இரட்சிப்பிற்கு "தேர்ந்தெடுத்த" அல்லது முன்னறிவித்த காலத்திலிருந்தே இருந்து வருகிறது. நிச்சயமாக, வெவ்வேறு மரபுகள் முன்குறித்தல் என்ற கருத்தை வித்தியாசமாக விளக்குகின்றன. ஆனால் கேள்விக்கு அப்பாற்பட்டது என்னவென்றால், தேவன் உலகைப் படைப்பதற்கு முன்பே முன்குறித்து விட்டார். முன்குறிப்பு அவருடைய நித்திய ஆலோசனையின் ஒரு பகுதி மட்டுமே. இந்த ஆலோசனை மாறாதது, ஏனென்றால் தேவன் எல்லாவற்றையும் அதற்கு இணங்க வைக்கிறார்.

நாம் கூர்ந்து கவனித்தால், பண்டைய காலங்களில் தேவனுடைய வழிகள் இன்று அவருடைய வழிகளுடன் ஒத்துப்போகின்றன என்பதை தேவனுடைய திட்டத்தின் மாறாத தன்மையானது நமக்கு உறுதியளிக்கிறது. ஒரு கட்டத்தில், பண்டைய மக்களுக்கான தேவனுடைய சித்தமும் நமக்கான அவருடைய சித்தமும் ஒரே மாதிரியானவை, ஏனென்றால் அவை இரண்டும் அவருடைய படைப்பிற்கான அவரது மாறாத நோக்கத்திற்குள் பொருந்துகின்றன.

இரண்டாவதாக, தேவன் தன் குணத்தில் மாறாதவர். அவரது சாராம்சம், நபர்கள் மற்றும் பண்புகள் ஒருபோதும் மாறாதவை.

## குணம்

தேவன் தம்முடைய குணத்தின் வெவ்வேறு அம்சங்களை மற்ற நேரங்களை விட சில சமயங்களில் மிக முக்கியமாக வெளிப்படுத்துகிறார். சில நேரங்களில் அவர் தனது இரக்கத்தையும், சில நேரங்களில் கோபத்தையும் காட்டுகிறார். சில நேரங்களில் அவர் தனது சர்வஞானத்தை வெளிப்படுத்துகிறார், மற்ற நேரங்களில் அதை மறைக்கிறார். ஆனால் அவரது குணாதிசயங்களின் முழு வரம்பான அவரது நித்திய இயல்பு - எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும். அதனால்தான் யாக்கோபு 1:17-ல் யாக்கோபு தேவனை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> சோதிகளின் பிதாவாகிய அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (யாக்கோபு 1:17).

வேதாகமத்தின் அசல் அர்த்தத்திற்கும் நவீன பயன்பாட்டிற்கும் இடையே எப்போதும் குறிப்பிடத்தக்க தொடர்புகள் இருக்கும் என்பதைக் காண தேவனுடைய மாறாத குணம் நமக்கு உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட வேத பகுதி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரு தெய்வீகப் பண்பைப் பற்றிப் பேசும்போது, அசல் வாசகர்கள் தேவனுடைய பிற பண்புகளின் பின்னணியில் அந்த குணாம்சத்தைப் புரிந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதுபோலவே, நவீன வாசகர்கள் ஒவ்வொரு வேதாகமத்தின் அம்சங்களையும் தேவனுடைய எந்த குணாதிசயங்களையும் ஒருபோதும் புறக்கணிக்காத வழிகளில் அப்பியாசப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காரணத்திற்காக, தேவனுடைய மாறாத பண்புகள் எப்போதும் அசல் அர்த்தத்திற்கும் நவீன பயன்பாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமையின் அளவீடாக அமைகின்றன.

மூன்றாவதாக, தேவன் தம்முடைய உடன்படிக்கை வாக்குத்தத்தங்களில் மாறாதவராக இருக்கிறார். தேவன் தாம் இதுவரை செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுவார்.

## உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள்

சில நேரங்களில் கிறிஸ்தவர்கள் தேவன் சொல்வதெல்லாம் வாக்குத்தத்தம் என்று நினைத்து தவறு செய்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், தேவன் சபதம் எடுக்கும்போதோ, உடன்படிக்கை செய்யும்போதோ அல்லது சத்தியம் செய்யும்போதோ மட்டுமே வாக்குத்தத்தம் அளிக்கிறார். நாம் எண் 23:19-ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண்ணாகமம் 23:19).

தேவன் வாக்குத்தத்தம் செய்யும்போது, அவருடைய வார்த்தை மாறாததாக இருக்கிறது. இல்லையெனில், அவர் தனது முடிவை மாற்றிக் கொள்ள சுதந்திரமாக இருக்கிறார். ஆதியாகமம் 15-ல் ஆபிரகாமின் சந்ததியினரை நட்சத்திரங்களைப் போல எண்ணற்றவர்களாக ஆக்குவேன் என்று தேவன் சொன்னதைக் கவனியுங்கள். ஆபிரகாம் இதற்கு நன்றி செலுத்தினார், ஆனால் ஆசீர்வாதத்தை உறுதிப்படுத்தும்படி அவர் தேவனிடம் கேட்டார். எனவே, தேவன் அவருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்.

இருப்பினும், தேவன் ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுக்காத சந்தர்ப்பங்களில், அவரது வார்த்தைகள் சாப அச்சுறுத்தல்களாகவும் ஆசீர்வாதத்தின் வார்த்தைகளாகவும் நன்கு புரிந்து கொள்ளப்படுகின்றன. உதாரணமாக, யோனாவின் புஸ்தகத்தில் தேவன் நினிவேயை அழிப்பதாக அச்சுறுத்தினார், ஆனால் அதன் மக்கள் மனந்திரும்பியபோது அவர் மனம் வருந்தினார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சந்தேகமே இல்லாமல், அந்த நேரத்தில் நினிவேயை அழிப்பது குறித்து தேவன் தனது மனதை மாற்றினார். ஆனால் அவர்களை காப்பாற்றியபோது அவர் எந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாக்குத்தத்தத்தையும் மீறவில்லை. உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் என்பவை உடன்படிக்கை சத்தியத்தின் மூலம் செய்ய தேவன் ஆணையிட்ட காரியங்கள் ஆகும்.

வேதாகமத்தில் தேவனுடைய ஒவ்வொரு வெளிப்பாடும் தேவன் தம்முடைய உடன்படிக்கையையும் உடன்படிக்கை வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவார் என்று கருதுகிறது. அசல் வாசகர்கள் இந்த ஒளியில் வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியையும் புரிந்து கொள்ள வேண்டும், நவீன வாசகர்களும் அதைச் செய்ய வேண்டும். தேவனுடைய மாறாத வாக்குத்தத்தங்களில் நாம் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். அவருடைய சலுகைகளும் அச்சுறுத்தல்களும் நம்மைக் கீழ்ப்படியத் தூண்ட வேண்டும்.

வேதாகமத்தின் முதல் பெறுநர்களைப் போலவே நமக்கும் ஒரே தேவன் இருப்பதை இப்போது நாம் காண்கிறோம், நாம் இதேபோன்ற உலகில் வாழ்கிறோம் என்ற உண்மையைப் பார்ப்போம்.

## உலகம்

உலகம் நிலையானதா அல்லது மாறுகிறதா என்பதில் காலங்காலமாக தத்துவவாதிகள் மல்யுத்தம் செய்து வருகின்றனர். பல வழிகளில் இரண்டுமே உண்மை என்று பொதுவான அனுபவம் நமக்குச் சொல்கிறது. தேவனுடைய படைப்பு எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது, ஆனால் வேதத்தின் ஒவ்வொரு வாசகர்களுக்கும் உலகின் பல அம்சங்கள் மாறாமல் உள்ளன. வேதாகமத்தை நம் நாளில் பயன்படுத்தும்போது, இந்த இரண்டு உண்மைகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"வரலாறு மீண்டும் நிகழ்கிறது" என்று ஒரு பழமொழி உள்ளது, மேலும் நடப்பு நிகழ்வுகள் பெரும்பாலும் கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளை ஒத்திருக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். வேதாகமத்தின் அசல் வாசகர்களைப் போலவே, நாமும் தேவனால் படைக்கப்பட்ட உலகில் வாழ்கிறோம். நாம் பாவத்தில் விழுந்திருந்தாலும், தேவனுடைய மீட்பையும் அனுபவித்திருக்கிறோம். பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த உண்மையான விசுவாசிகள் மற்றவர்களிடமிருந்தும் பிசாசுகளிடமிருந்தும் எதிர்ப்பை எதிர்கொண்டனர், இன்றும் நாம் அதே எதிர்ப்பை எதிர்கொள்கிறோம். அவர்கள் வெற்றி பெற தேவனுடைய உதவியை நம்பியிருந்தனர்; நாமும் அவரது உதவியை நம்பியிருக்கிறோம் . இயற்கையின் வழக்கமான வடிவங்கள் அல்லது விதிகள் என்று நாம் அடிக்கடி அழைப்பவைகளின் ஸ்திரத்தன்மையையும் நாம் காணலாம். சூரியனின் உதயம் மற்றும் அஸ்தமனம், மனிதனுக்கு வரும் நோய், உணவு மற்றும் தண்ணீரின் தேவை மற்றும் எண்ணற்ற பிற விஷயங்களைப் பற்றி வேதவாக்கியங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பேசும்போது, வேதாகமத்தின் முதல் வாசகர்கள் வசித்ததைப் போன்ற உலகில் நாம் வாழ்கிறோம் என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

இன்னும் குறிப்பிட்ட மற்றும் குறுகிய வழிகளில் கூட, வேதாகமத்தின் அசல் வாசகர்களின் உலகத்திற்கும் நமது உலகத்திற்கும் இடையே முக்கியமான ஒற்றுமைகளைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் 20-ல் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட பத்துக் கட்டளைகள் பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகளில் வாழ்ந்த தேவனுடைய மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பின்னணியை அளித்தன. இதே பிரமாணகள் புதிய ஏற்பாட்டில் அவருடைய மக்களின் வாழ்க்கையை வழிநடத்த மீண்டும் பயன்படுத்தப்பட்டன. 2 தீமோத்தேயு 3:16, 17-ல் பவுல் போதித்தது போலவே, அதே கட்டளைகள் இன்றும் திருச்சபையை வழிநடத்துகின்றன.

இதேபோல், தேவனுடைய மக்களுக்கான ஒரு நிரந்தர வம்சத்தின் தலைவராக தாவீதை தேவன் தேர்ந்தெடுத்தது பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்திற்கான வரலாற்று பின்னணியையும், புதிய ஏற்பாட்டில் தாவீதின் பெரிய குமாரனாக இயேசுவின் அரசாட்சிக்கான பின்னணியையும் வழங்கியது. வெளிப்படுத்தின விசேஷம் 22:16 போன்ற இடங்களில் நாம் கற்றுக்கொள்வது போல, தாவீதின் வழியில் வந்த ராஜாவாக அவர் நிரந்தரமாக ஆட்சி செய்வதன் காரணமாக திருச்சபை இயேசுவை நமது ராஜாவாகவும் கர்த்தராகவும் தொடர்ந்து சேவிக்கிறது.

இது போன்ற எடுத்துக்காட்டுகள் விளக்குவது போல, நம்முடைய உலகத்திற்கும் வேதாகமத்தின் முதல் வாசகர்களின் உலகங்களுக்கும் இடையிலான தொடர்புகள் வேதத்தின் சரியான நவீன பயன்பாடுகளைத் தீர்மானிக்க உதவும்.

வேதாகமத்தின் அனைத்து வாசகர்களும் ஒரே தேவனைக் கொண்டுள்ளனர் மற்றும் ஒரே மாதிரியான உலகில் வாழ்கிறார்கள் என்பதை இப்போது நாம் பார்த்தோம், நாம் ஒரே வகையான மக்கள் என்பதால் இருக்கும் தொடர்புகளைக் கருத்தில் கொள்வோம்.

## மக்கள்

நவீன மக்கள் வேதாகமத்தை முதன்முதலில் பெற்ற மக்களுடன் குறைந்தபட்சம் மூன்று வழிகளில் ஒத்திருக்கின்றனர். முதலாவதாக, எல்லா மனிதர்களும், அவர்கள் எப்போது அல்லது எங்கு வாழ்ந்தாலும், தேவனுடைய சாயலாகவே இருக்கின்றனர். இரண்டாவதாக, நம்மிடம் சமயப் பிளவுகள் இருக்கின்றன. மூன்றாவதாக, உலகில் அதே வர்க்க மக்கள் தான் வாழ்கிறார்கள். மனிதர்கள் அனைவரும் தேவனுடைய பாவ சாயல்கள் என்பதில் தொடங்கி இந்த ஒற்றுமைகள் ஒவ்வொன்றையும் ஆராய்வோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பாவமான சாயல்கள்

ஆதியாகமம் 1:27 போன்ற வசனங்களில், தேவன் மனிதகுலத்தைப் படைத்தபோது, அவர் நம்மைத் தம்முடைய சாயலில் படைத்தார் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. எல்லா மனிதர்களும் பகுத்தறிவு, மொழி, தார்மீக மற்றும் மத ரீதியான தேவனுடைய பிரதிநிதிகள் என்பதே இதன் பொருளாகும்.

அதே நேரத்தில், எல்லா மனிதர்களும் பாவத்தில் விழுந்துள்ளனர். மனிதகுலம் இன்று நமது பகுத்தறிவு, மொழி, தார்மீக மற்றும் மத திறன்களைப் பயன்படுத்தி தேவனை மகிமைப்படுத்த வேண்டிய வழியில் பயன்படுத்துவதில்லை. இறை நம்பிக்கையற்றவர்கள் தேவனுடைய ஆட்சிக்கு அடிபணிய வேண்டிய அவசியமில்லை என்பது போல் செயல்படுகிறார்கள். விசுவாசிகள் கூட அவருக்கு விசுவாசமாக இருப்பதில் தோல்வியடைகிறார்கள். 1 இராஜாக்கள் 8:46-ல் ஆலயத்தின் பிரதிஷ்டையில் சாலொமோன் இவ்வாறு கூறினார்:

> பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே (1 இராஜா 8:46).

> முறைப்படுத்தப்பட்ட இறையியலில், ”மொத்த சீரழிவு” என்று அழைக்கப்படும் இந்த போதனை உள்ளது. மேலும் இதன் பொருள் என்னவென்றால், மனிதனின் மொத்தமும், அதாவது அவனது எண்ணம், உணர்வு மற்றும் நடத்தை அனைத்தும் பாவத்தால் கறைபட்டுவிட்டன, அதனால் அவன் செய்யும் அனைத்தும் தேவனுடைய கட்டளைகளையும் பரிசுத்த தராதரங்களையும் மீறிச் செய்கிறான் என்ற அடிப்படை அனுமானம் உள்ளது. ஆம், பாவ சுபாவம் என்று ஒன்று இருக்கிறது. ஒரு பிரச்சனை எவ்வளவு அடிப்படையானது, குறிப்பாக தேவனுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதைப் பற்றி வேதம் பேசுகிறது.
>
> – Dr. லூயிஸ் ஆர்டெசா

> மானுடவியல் மற்றும் சமூகவியல் ஆய்வுகளில் இந்த நாட்களில் கேட்கப்படும் பெரிய கேள்விகளில் ஒன்று, மனிதர்களுக்கு பாவ இயல்பு உள்ளதா என்பதுதான். பல ஆண்டுகளாக, மீண்டும் மீண்டும், மனித கல்வி, மனித மேம்பாடு, மனித கற்றல் பற்றிய கோட்பாடுகள் அசல் பாவத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன, ஏனென்றால் நாம் அனைவரும் வீழ்ச்சியடைந்த இயல்பைக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை… அதாவது, மனிதர்களாகிய நாம் சாதனை, உடைமை என்ற சுயநல

> வேட்கையால் கட்டுப்படுத்தப்படுகிறோம், அந்த விஷயம் நாம் செய்யும் அனைத்தையும் சீர்குலைக்கிறது. மனிதர்கள் இயற்கையாகவே நல்லவர்கள் என்று நீங்கள் கருதினால் மனித நடத்தையை நீங்கள் புரிந்து கொள்ள முடியாது. உண்மையில், நீங்கள் மனித இனத்தின் வரலாற்றைப் பார்க்கும்போது, நாம் இயற்கையாகவே நல்லவர்கள் அல்ல என்றும் தீய சுய-மையப்படுத்தப்பட்டவர்கள் என்றும் கூற வேண்டும். வேதத்தைப் பற்றிய சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் என்று அது கூறுகிறது. மனித குலம் பற்றிய வேதாகமக் கண்ணோட்டத்தின் அதிசயம் இதுதான், ஏனென்றால் ”ஓ, மனிதர்கள் மிகவும் தீயவர்களும் ஆக்ரோஷமான குரங்குகளுமாய் இருக்கிறார்கள்” என்று பல மானுடவியலாளர்களும் சமூகவியலாளர்களும் தீமையின் இருப்பை அங்கீகரிக்கிறார்கள். ”நாம் வீழ்ந்தவர்களாயிருக்கிறோம், நமக்குள் இருக்கிற தேவனுடைய சாயலானது சிதைந்திருக்கிறது” என்று வேதம் சொல்கிறது.
>
> – Dr. ஜான் ஆஸ்வால்ட்

பண்டையவர்களாக இருந்தாலும் சரி, நவீனமானவர்களாக இருந்தாலும் சரி, வேதாகமத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அனைவரும் ஒரே பாவ இயல்பைப் பகிர்ந்து கொள்கிறார்கள். வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியின் அசல் அர்த்தமும் ஏதோ ஒரு வகையில் இந்த மனித நிலையைப் பற்றி பேசியது. நாம் அனைவரும் பாவத்தால் சிதைக்கப்பட்ட தேவனுடைய சாயல்களாக இருக்கிறோம். வேதாகமத்தின் அசல் வாசகர்கள் அனைவருடனும் இந்த குணங்களை நாம் பகிர்ந்துகொள்வதால், இந்த ஒற்றுமைகள் ஒவ்வொரு வேத பகுதியிலிருந்தும் அர்த்தமுள்ள நவீன பயன்பாடுகளைப் பெற உதவும்.

தேவனுடைய பாவ சாயல்களாக நாம் இருப்பதைத் தவிர, வேதாகமத்தின் அசல் மற்றும் நவீன வாசகர்களும் ஒரே மாதிரியானவர்கள், ஏனென்றால் நாம் அனைவரும் மத பிளவுகளை அனுபவிக்கிறோம்.

## சமயப் பிரிவுகள்

முதல் வேதாகமம் ஏவப்பட்ட காலத்திலிருந்தே, வேதத்தை வாசிப்பவர்கள் பின்வரும் மூன்று குழுக்களில் ஒன்றாக உள்ளனர்: அவிசுவாசிகள், போலி விசுவாசிகள் மற்றும் விசுவாசிகள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுக்கு அடிபணிய மறுப்பதன் மூலம் தங்களைத் தாங்களே எதிரிகளாக்கிக் கொள்பவர்களே அவிசுவாசிகள். இஸ்ரவேலுக்கும் திருச்சபைக்கும் தேவன் அருளிய விசேஷ வெளிப்பாடுகளைப் பற்றிக் கேள்விப்படாதவர்களும், கேள்விப்பட்டவர்களும் இந்த மனித இனப் பிரிவினையில் அடங்குவர்.

போலி விசுவாசிகள் தேவன் மீது மேலோட்டமான விசுவாசத்தை காட்டுகிறார்கள். அவர்கள் விசுவாசிகளின் வெளிப்புற தோற்றத்தைக் கொண்டிருக்கலாம், ஆனால் அவர்களுக்கு உண்மையான விசுவாசம் இல்லை, இதன் விளைவாக அவர்கள் அவரது நித்திய நியாயத்தீர்ப்பிலிருந்து மீட்கப்படுவதில்லை.

மாறாக, விசுவாசிகள் தேவனுக்கு நேர்மையான, உண்மையுள்ள அர்ப்பணிப்புகளைச் செய்பவர்கள், அதன் மூலம் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, தேவனின் நித்திய நியாயத்தீர்ப்பிலிருந்து இரட்சிக்கப்படுபவர்கள்.

பொதுவாக, இந்த மூன்று மதக் குழுக்களுக்கும் வேதாகமத்தின் நவீன பயன்பாடுகள் இதே குழுக்களுக்கான அசல் பயன்பாடுகளுடன் மிகவும் ஒத்ததாக இருக்க வேண்டும். அவிசுவாசிகளுக்கு, வேதவாக்கியங்கள் முதலில் பாவத்தைக் கட்டுப்படுத்தவும், தங்களுடைய இழந்த நிலையை வெளிப்படுத்தவும், மனந்திரும்பி இரட்சிக்கப்பட அவர்களை அழைக்கவும் வடிவமைக்கப்பட்டன; நவீன பயன்பாட்டில், நாம் அதையே செய்கிறோம். போலி விசுவாசிகளைப் பொறுத்தவரை, வேத பகுதிகள் பாவத்தைக் கட்டுப்படுத்தவும், அவர்களின் பாசாங்குத்தனங்களை அம்பலப்படுத்தவும், மனந்திரும்பி இரட்சிக்கப்பட அழைக்கவும் வடிவமைக்கப்பட்டன; நவீன பயன்பாட்டில், நாம் அதே இலக்குகளை நோக்கியே செயல்படுகிறோம். விசுவாசிகளைப் பொறுத்தவரை, வேத பகுதிகள் தங்கள் பாவத்தைக் கட்டுப்படுத்தவும், தோல்விகளைக் குறித்து எச்சரிக்கவும், தேவனுடைய கிருபையில் நன்றியுள்ள வாழ்க்கையை வாழ அவர்களை வழிநடத்தவும் வடிவமைக்கப்பட்டன; நவீன கிறிஸ்தவர்களாகிய நாம் இதே நோக்கங்களுக்காக வேதாகமத்தைப் பயன்படுத்துகிறோம்.

பாவ சாயல்களாகவும், மதப் பிளவுகளை அனுபவிப்பவர்களாகவும் இருப்பதோடு மட்டுமல்லாமல், அசல் மற்றும் நவீன வாசகர்கள் ஒரே மாதிரியானவர்கள், ஏனெனில் வரலாறு முழுவதும் ஒரே மாதிரியான அந்த நிலை தொடர்ந்து வருகிறது.

## வகுப்புகள்

மனிதர்களைப் பல வகைகளில் வகைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, நம்மிடம் உள்ள குறிப்பிட்ட குணாதிசயங்கள் அல்லது பண்புகளின் அடிப்படையில் நாம் வகைப்படுத்தப்படலாம். சிலர் வயதானவர்கள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றவர்கள் இளைஞர்கள்; சிலர் ஆண், சிலர் பெண்; சிலர் பணக்காரர்கள், சிலர் ஏழைகள்; சிலர் சக்திவாய்ந்தவர்கள், மற்றவர்கள் பலவீனமானவர்கள். மற்றவர்களுடனான நமது உறவுகளைப் பொறுத்தும் நம்மை வகைப்படுத்தலாம். நாம் பெற்றோர்களாகவோ, பிள்ளைகளாகவோ, உடன்பிறப்புகளாகவோ, எஜமானர்களாகவோ, வேலையாட்களாகவோ, நண்பர்களாகவோ அல்லது வேறு எதுவாகவோ இருக்கலாம். அல்லது நாம் என்ன செய்தோம் என்பதன் அடிப்படையில் மாவீரர்களாகவோ குற்றவாளிகளாகவோ வகைப்படுத்தலாம்; அல்லது போதகர்கள் மற்றும் விவசாயிகள் போன்ற நம்முடைய வேலைகளுக்கு ஏற்பவும் நாம் வகைப்படுத்தப்படலாம். வேதாகமத்தின் அசல் வாசகர்களுக்கும் இது பொருந்தும்.

சொல்லப்போனால், வேதாகமத்தின் பல பகுதிகள் குறிப்பாக குறிப்பிட்ட வர்க்க மக்களை நோக்கியே இயக்கப்படுகின்றன. கோபம் கொண்டவர்கள், அன்பானவர்கள், சோம்பேறிகள், மனந்திரும்புபவர்கள், பணக்காரர்கள், ஏழைகள் ஆகியோரை மையமாகக் கொண்ட வேத பகுதிகளை நாம் காண்கிறோம். குறிப்பாக கணவர்கள், அல்லது மனைவிகள், அல்லது குழந்தைகள், உதவியாளர்கள், அல்லது திருடர்கள் அல்லது ஊழியர்கள் என்று அடையாளம் காணப்பட்ட நபர்களைக் குறிப்பிடும் பத்திகளையும் நாம் காண்கிறோம்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் இதே வகுப்புகள் இருப்பதால், அவை அசல் வாசகர்களுக்கும் அடுத்தடுத்த அனைத்து வாசகர்களுக்கும் இடையில் அர்த்தமுள்ள இணைப்புகளை உருவாக்குகின்றன. இந்த இணைப்புகள் நமது பயன்பாட்டை வழிநடத்த உதவுகின்றன. பண்டைய மற்றும் நவீன செல்வந்தர்கள் பணத்தைப் பற்றிய வேத பகுதிகளிலிருந்து இதேபோன்ற பயன்பாடுகளைப் பெறலாம். பண்டைய மற்றும் நவீன தலைவர்கள் தலைமைத்துவத்தைப் பற்றிய வேத பகுதிகளிலிருந்து இதேபோன்ற பயன்பாடுகளைப் பெறலாம். இது போல பல பயன்பாடுகள் வேத பகுதிகளில் இருக்கின்றன. வேதாகமத்தின் முதல் வாசகர்களுடன் இந்த வகையான தொடர்புகளைப் பகிர்ந்து கொள்கிறோம் என்பதை அங்கீகரிப்பதன் மூலம் வேதத்தை நம் வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கான நமது எல்லா முயற்சிகளுக்கும் உதவ முடியும்.

இப்போது நாம் வேதாகமத்தின் பயன்பாட்டின் அவசியத்தை ஆராய்ந்து, அசல் மற்றும் நவீன வாசகர்களுக்கு இடையிலான சில முக்கியமான தொடர்புகளைக் கருத்தில் கொண்டதால், நமது பயன்பாட்டை பாதிக்க வேண்டிய அசல் மற்றும் நவீன வாசகர்களுக்கு இடையிலான வளர்ச்சிகளில் நம் கவனத்தை திருப்புவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னேற்றங்கள்

வேதத்தைக் கவனமாகப் படிக்கும் பலர், அது சில நேரங்களில் அந்நியமாகத் தெரிகிறது என்றும் அது வேறொரு உலகத்திலிருந்து வந்தது போலத் தெரிகிறது என்றும் கூறுகிறார்கள், இது மிகவும் உண்மையான அர்த்தத்தில் உள்ளது என்றும் கூறுகிறார்கள். வேதத்தின் புத்தகங்கள் அநேக நாட்களுக்கு முன்பாக எழுதப்பட்டவை. அவை நம்மில் பெரும்பாலானோர் படிக்காத மொழிகளிலும், நம் சொந்த கலாச்சாரங்களிலிருந்து மிகவும் வேறுபட்ட கலாச்சாரங்களிலும் எழுதப்பட்டன. நம்முடைய சொந்த வாழ்க்கைக்கும் வேதாகமத்தின் அசல் வாசகர்களின் வாழ்க்கைக்கும் பெரிய வேறுபாடு உள்ளது. எனவே, நவீன வாழ்க்கையில் வேதத்தைப் பயன்படுத்தும்போது, ஏதாவது ஒரு வகையில், இந்த காரணிகள் அனைத்தையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்த பாடத்தில், இந்த வகையான வேறுபாடுகளைக் கணக்கிடுவதற்கான குறிப்பிட்ட வழிகளை நாம் உன்னிப்பாகப் பார்ப்போம். எனவே, இப்போதைக்கு, வேதாகமம் ஏவப்பட்டதிலிருந்து நிகழ்ந்த மூன்று முக்கிய வகையான வளர்ச்சிகளான சகாப்த, கலாச்சார மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிகளை நாம் அடையாளம் காண்போம், மேலும் அவை வேதாகம புத்தகங்களின் நவீன பயன்பாட்டில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மீட்பு வரலாற்றில் நிகழ்ந்த சகாப்த வளர்ச்சிகளை முதலில் பார்ப்போம்.

## சகாப்த பரிசீலனைகள்

உலக வரலாறு குறித்த வேதத்தின் கண்ணோட்டத்தை கிறிஸ்தவர்கள் அடிக்கடி மூன்று நிலைகளில் சுருக்கமாகக் கூறியுள்ளனர்; அவையாவன: சிருஷ்டிப்பு, தேவன் முதன்முதலில் உலகைப் படைத்தார்; வீழ்ச்சி, மனிதகுலம் முதன்முதலில் பாவம் செய்து தேவனால் சபிக்கப்பட்டது; மீட்பு, வீழ்ச்சிக்குப் பிந்தைய காலம், இதில் தேவன் நம் பாவத்திலிருந்து நம்மை மீட்கிறார். ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்த உடனேயே, தேவன் மீட்புக்கான ஒரு நீண்ட, மெதுவான செயல்முறையைத் தொடங்கினார். பல்லாயிரம் ஆண்டுகளாக, அவர் சபிக்கப்பட்ட படைப்பிற்கு உள்ளேயும் அருகிலும் தனது மீட்பின் ராஜ்யத்தை இரக்கத்துடன் கட்டமைத்துள்ளார்.

படைப்பின் மீதான தேவனுடைய ஆட்சியின் முற்போக்கான தன்மை, வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு சகாப்தங்களுக்கிடையில் இடைவெளியை உருவாக்கும் முன்னேற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது என்பதை பல இறையியலாளர்கள் அங்கீகரித்துள்ளனர். பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையில் மிகவும் வெளிப்படையான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சகாப்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இறையியலாளர்கள் பொதுவாக வேதம் முழுவதும் காணப்படுகிற தேவனுடைய பல்வேறு உடன்படிக்கைகளின்படி சகாப்தங்களை அடையாளம் காண்கிறார்கள், குறிப்பாக பழைய ஏற்பாட்டில் ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது மற்றும் புதிய ஏற்பாட்டில் இயேசுவுடனான உடன்படிக்கைகளின்படி அடையாளம் காண்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, பாவநிவர்த்தி பலிகள் தொடர்பான பிரமாணங்களுக்கு வரலாற்றில் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு விஷயங்கள் தேவைப்பட்டன. மோசேயின் காலத்தில் அவர்களுக்குக் கூடாரத்தில் பலிகள் தேவைப்பட்டன. சாலொமோனின் காலத்தில், அவர்களுக்கு ஆலயத்தில் பலிகள் தேவைப்பட்டன. புதிய ஏற்பாட்டின் முற்பகுதியில், அவர்கள் இயேசுவை சிலுவையில் பலியிட வேண்டியிருந்தது. பிந்தைய புதிய ஏற்பாட்டில், பலி செலுத்தப்படுவது முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

> கிறிஸ்து மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்து திரும்பி வரத் தயாராக இருக்கிற இந்த காலத்தில் விசுவாசிகளாக இருக்கக்கூடிய நாம் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது வேதாகமத்தைப் புரிந்துகொண்டு செயல்படுத்தும் விதம் பழைய ஏற்பாட்டு மக்கள் அதைப் பயன்படுத்திய விதத்தை விட வேறுபட்டதாக இருக்க வேண்டும். ஆனால், நிச்சயமாக, வேறு பல நேரங்களில் நாம் உண்மையில் எந்த மாற்றங்களையும் செய்ய வேண்டியதில்லை… உதாரணமாக பலி முறையை எடுத்துக் கொள்வோம். கிறிஸ்து இப்போது நமது பலியாக இருப்பதால் நாம் இனி பலிகளைச் செலுத்த வேண்டியதில்லை. எனவே அந்த அர்த்தத்தில் பயன்பாடு மிகக் குறைவாகும். அருகிலிருக்கும் ஆலயத்திற்கு சென்று ஒரு மிருகத்தை அறுத்து, அந்த மிருகம் என் பாவங்களையெல்லாம் தாங்கும்படி அந்த மிருகத்தின் மீது என் கைகளை வைக்க வேண்டிய அவசியமில்லை. மீட்பின் வரலாற்றின் வெளிச்சத்தில் வேதாகமத்தைப் பயன்படுத்தும் முறை இன்று இருக்க வேண்டும்.
>
> – Dr. டேனியல் எல். கிம்

> மீட்பு வரலாற்றில் வேத பகுதிகளை நாம் வியாக்கியானம் செய்து நம் வாழ்க்கையில் பயன்படுத்தும்போது வேத பகுதிகள் எங்கு நிகழ்கின்றன என்பதை நாம் மதிப்பிடுவது மிகவும் முக்கியமானது, ஏனென்றால், அவற்றின் மீட்பு வரலாற்றுப் பின்னணியில் உள்ள சில பகுதிகள் வேறுபட்ட

பொருளாதாரம், நமது சொந்த சூழலை விட வேறுபட்ட விஷயங்களின் நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பது மிகவும் தெளிவாகிறது. பழைய ஏற்பாட்டில் உள்ள பலி முறையைப் பற்றியதான ஒரு எளிய உதாரணத்தை நான் சொல்கிறேன். மிருக பலியைப் பற்றிய பழைய ஏற்பாட்டில் உள்ள பகுதிகள் நமக்கு பொருத்தமற்றவை அல்ல, ஆனால் அந்த பலிகள் கிறிஸ்துவில் நிறைவேறிய அளவிற்கு அவை பொருத்தமானவைகளாக இருக்கின்றன. எனவே அந்த வசனங்களைப் படிக்கும்போது, நான் எங்காவது ஒரு ஆட்டுக்குட்டியையோ, காளையையோ அல்லது புறாவையோ கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் நினைக்காமல், என் பாவம் நீங்கும் பொருட்டு நான் கிறிஸ்துவை நாட வேண்டும். ஆனால் பல வழிகளில் நாம் வேதவசனங்களைப் படிக்கும்போது, உண்மை என்ன என்பதை மதிப்பிட வேண்டும். இது மீட்பு வரலாற்று நிர்வாகத்தின் பழைய உடன்படிக்கை அம்சத்தில் நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, நாம் இப்போது இறையாட்சியில் வாழவில்லை, எனவே இஸ்ரவேலரின் வாழ்க்கையில் இருந்த விஷயங்கள் இன்று விசுவாசிகளாக இருக்கும் நம் வாழ்க்கைக்கு பொருந்தாது. ஒரு வேத பகுதியின் உடனடி இலக்கணப் பின்னணியை மட்டுமல்ல, அதனுடைய மீட்பின் வரலாற்றுப் பின்னணியையும் நாம் எப்போதும் மனதில் கொள்ள விரும்புகிறோம், இதனால் புதிய உடன்படிக்கைக்குப் பிந்தைய யதார்த்தத்தின் நமது நிலைப்பாட்டில் விசுவாசிகளுக்கு தேவையான சரியான பயன்பாட்டை கொடுக்க முடியும்.

– Dr. ராபர்ட் ஜி. லிஸ்டர்

பல வழிகளில், வேத வரலாறு ஒரு வளர்ந்து வரும் மரம் போன்றது. ஒவ்வொரு மரமும் ஒரு விதையிலிருந்து வளர்ந்து, பெரிதாகி, இறுதியில் முழுமையாக வளர்ந்த மரமாக உருவாகிறது. அந்த மரமாக மாறும் அனைத்தும் ஆரம்ப விதையில் அடங்கியுள்ளன. ஆனால் காலப்போக்கில் மரம் முழுமையாக முதிர்ச்சியடைய வளர்ந்து வர வேண்டும்.

இதேபோல், வேதாகம வரலாறு முழுவதும் மீட்பு வளர்ந்து வந்துள்ளது. வேதத்தை நம் வாழ்க்கையில் பயன்படுத்தும்போது இந்த வளர்ச்சிகளை நாம் மனதில் வைக்க வேண்டும். இந்த வளர்ச்சி மாதிரியானது முழு வேதாகமமும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நமக்கு பொருத்தமானதும் அதிகாரப்பூர்வமானதுமாய் இருக்கிறது என்பதை நமக்கு கற்பிக்கிறது, ஆனால் பழைய வெளிப்பாடு எப்போதும் பிற்கால வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் பயன்படுத்தப்பட வேண்டும்.

சகாப்த வளர்ச்சிகளைப் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, வேதத்தில் நேரடியாக குறிப்பிடப்பட்ட கலாச்சாரங்களிலிருந்து இன்று நமது கலாச்சாரங்களை வேறுபடுத்தும் கலாச்சார வளர்ச்சிகளின் கருத்தை ஆராய்வோம்.

## கலாச்சார முன்னேற்றம்

வேதாகமத்தின் அசல் மற்றும் நவீன வாசகர்களுக்கு இடையிலான கலாச்சார வளர்ச்சிகளைப் பற்றி சிந்திக்கும்போது, ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் இரண்டையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். ஒற்றுமைகளைப் பொறுத்தவரை, ”ஆபிரகாமின் அனுபவத்திற்கு இணையான எந்த கலாச்சார வடிவங்களை நாம் எதிர்கொள்கிறோம்?” மற்றும் ”நமது கலாச்சாரம் எந்த விதத்தில் தாவீதின் கலாச்சாரத்தைப் போன்றதாக இருக்கிறது” போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டும். வேறுபாடுகளைப் பொறுத்தவரை, ”பழைய ஏற்பாட்டின் பண்டைய சமூகங்களிலிருந்து மனித கலாச்சாரம் எவ்வாறு கணிசமாக மாறியுள்ளது?” மற்றும் ”என்ன பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் வேறுபட்டவை?” போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டும். இந்த வகையான கேள்விகளுக்கான பதில்கள் இன்று நாம் வேதாகமத்தைப் பயன்படுத்தும் விதத்தில் முக்கியமான தாக்கங்களைக் கொண்டுள்ளன.

> வேதாகமம் எழுதப்பட்ட கலாச்சாரம் நம்முடைய கலாச்சாரத்திலிருந்து மிகவும் வேறுபட்டது. நம்மில் பலர் விவசாய, கிராமப்புற பொருளாதாரத்தில் வாழவில்லை. சிலர் இருக்கிறார்கள், ஆனால் மேலை நாடுகளில் இருக்கிற நம்முடைய வாழ்க்கை அப்படியில்லை. எனவே நாம் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். ரூத்தின் புத்தகத்தில் வாசிப்பது போல, கி.மு. 1000-ல் பெத்லகேமுக்கு வெளியே உள்ள நகர வாயிலில் வியாபாரம் நடந்த இடத்தில் நாம் இன்று வாழவில்லை. அந்த நாட்களில் ஒரு சட்டப்பூர்வ ஒப்பந்தத்தை எவ்வாறு நடத்தினார்கள் என்று தெரியுமா? காலணியை கழற்றிவிட்டு, அதன் அடிப்படையில் நீங்கள் கைகுலுக்கிக்கொண்டால் ஒப்பந்தம் முடிந்து விடும். நிச்சயமாக, அது விசித்திரமானது. நீங்கள் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வேறுபட்ட கலாச்சாரத்தில் நாம் வாழ்கிறோம். வணிகம் செய்வதிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவிலும் கலாச்சார

வேறுபாடுகள் இருக்கும். எல்லா வகையான விஷயங்களுக்கும் வெவ்வேறு கலாச்சார வெளிப்பாடுகள் இருக்கும். அதற்கு நாம் அனுதாபம் காட்ட வேண்டும், வேதாகமமும் அதன் சொந்த வழிகளைக் கொண்டுள்ளது என்பதை உணர வேண்டும். விஷயங்களை வித்தியாசமாக செய்யும் கலாச்சாரங்களில் நாம் வாழ்கிறோம். ஆனால், நம்முடைய வியாபாரத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்ற நியமங்களை வேதம் நமக்குக் கொடுத்திருக்கிறது; நாம் அதை நேர்மையுடன் செய்ய வேண்டும். நீங்கள் அதை ரூத்தின் புத்தகத்திலிருந்து படிக்கலாம். எனவே, அவர்களைப் போல வியாபார ஒப்பந்தங்களில் காலணிகளை கழற்றாவிட்டாலும் கூட, நமது வணிக நடவடிக்கைகளில் தார்மீக ஒருமைப்பாட்டுக் கோட்பாட்டைப் பயன்படுத்த வேண்டும்.

– Dr. பீட்டர் வாக்கர்

நம்முடைய தற்போதைய நிலைமையைப் பற்றி நாம் சிந்தித்து, ஆதி வாசகர்களின் காலத்துடன் ஒப்பிடும்போது, புதிய ஏற்பாட்டின் காலத்திற்கு குறைந்தது 2,000 ஆண்டு இடைவெளியும், பெரும்பாலும் பழைய ஏற்பாட்டின் காலத்திற்கு 3,000 அல்லது அதற்கு மேற்பட்ட கால இடைவெளியும் இருந்ததையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். எனவே கலாச்சார வேறுபாடுகள் இருக்கலாம், அவை ஆதி வாசகர்களின் அனுபவத்திலிருந்து நம்மை அகற்றுகின்றன. தொழில்நுட்பம் வியத்தகு முறையில் மாறிவிட்டது என்பது மிகவும் வெளிப்படையான ஒன்று. எடுத்துக்காட்டாக, நாம் காட்சிக்கு முக்கியத்துவம் தருகிற, விரைவான தகவல்தொடர்புக்கு பழக்கப்பட்ட மற்றும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் மிகவும் சூழப்பட்ட ஒரு கலாச்சாரத்திலும் வாழ்கிறோம். பழங்காலத்தில், 2,000 ஆண்டுகளுக்கு முன்பு, யோவான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதியபோது, அதை ஒரு நபர் சமூகத்திலிருந்து சமூகத்திற்கு எடுத்துச் செல்லப் போகும் ஒரு சுழற்சி கடிதமாக அதைச் செய்தார். அவர் ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்கு பயணம் செய்ததால் கடிதம் சென்றடைய பல நாட்கள் ஆனது. உடனடி தகவல் தொடர்பு அப்போது இல்லை. வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தைப் பற்றி நீங்கள் நினைக்கும்போது அது முதன்மையாக வாசித்து காதால் கேட்கப்பட வேண்டிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கடிதமாக இருந்தது. எனவே, புத்தகத்தின் தொடக்கத்திலேயே அதை வாசிக்கிற மற்றும் கேட்கிற பலருக்கும் ஒரு ஆசீர்வாதம் இருப்பதாகக் கூறுகிறது, அதாவது, ஒரு நபர் முழு புத்தகத்தையும் வாசகர்களுக்கு அந்த காலத்தில் வாசிக்கும் பழக்கம் இருந்தது. நம்மைப் பொறுத்தவரை, வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தைப் படிக்கும்போது வேகத்தைக் குறைத்து மெதுவாக நமது வசதிக்கு ஏற்றபடி வாசிப்பது மிகவும் எளிது. ஒரு வசனத்தை நிறுத்தி தியானம் செய்து, அதன் பொருள் என்னவென்று நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் ஆதி வாசகர்கள் 22 அதிகாரங்களையும் ஒரே நேரத்தில் கேட்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. எனவே, புத்தகத்தின் அனுபவம் முற்றிலும் வேறுபட்டது. அதன் பின்விளைவுகளில் ஒன்று என்னவென்றால், இந்த புத்தகத்தின் ஆதி வாசகர்கள் ஒருவேளை திகைத்துப் போயிருக்கலாம், புத்தகத்தில் உள்ள எல்லாவற்றையும் கண்டுபிடிக்க முடியாமல், ஒரு கட்டத்தில் விவரங்களைக் கண்டுபிடிப்பதைப் பற்றி கவலைப்படாமல், புத்தகத்தின் பொதுவான நோக்கத்தை மட்டும் புரிந்துகொண்டு, புத்தகத்தின் ஒட்டுமொத்த செய்தியை மட்டும் எடுத்துக்கொண்டார்கள் என்று நான் நினைக்கிறேன். எல்லாவற்றையும் கண்டுபிடிக்க முடியாமல், நம் இதய யதார்த்தத்தின் அடிப்படையில் இந்த புத்தகத்தில் உள்ள ஒப்புமைப் படங்கள் மேலும் மேலும் தொடத் தொடங்குகின்றன. எனவே, அந்த கலாச்சார வேறுபாடு உண்மையில் நம்முடைய புரிதலையும் வேதாகமத்தைப் படிப்பதற்கான நமது அணுகுமுறையையும் எவ்வாறு மாற்றும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு உள்ளது.
>
> — Dr. டேவிட் டபிள்யூ. சாப்மென்

சகாப்த மற்றும் கலாச்சார முன்னேற்றங்களைத் தவிர, வேதத்தின் மூல வாசகர்களிடமிருந்து இன்று மக்களை வேறுபடுத்தும் தனிப்பட்ட வளர்ச்சிகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

## தனிப்பட்ட முன்னேற்றங்கள்

வேத கால மக்களுக்கும் நமது சமகால உலகில் வாழும் மக்களுக்கும் இடையே கணிசமான ஒற்றுமைகள் உள்ளன, ஆனால் நவீன மற்றும் பண்டைய மக்களுக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன என்பதை நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அங்கீகரிக்க வேண்டும். வேதாகம வசனங்களை நாம் சரியாகப் பயன்படுத்த விரும்பினால், இந்த தனிப்பட்ட மாறுபாடுகளை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ”வேதத்தில் நாம் காணும் வாழ்க்கைகளோடு நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை எவ்வாறு ஒப்பிடப்படுகிறது?” ”சமூகத்தில் நமக்கு என்ன பங்கு இருக்கிறது?” ”நமது ஆவிக்குரிய நிலை என்ன?” ”இந்த கதாபாத்திரத்துடன் அல்லது அந்த கதாபாத்திரத்துடன் ஒப்பிடும்போது நாம் எவ்வாறு கர்த்தருக்கு சேவை செய்கிறோம்?” ”வேதாகம எழுத்தாளர்களில் நாம் காணும் எண்ணங்களுடன் நமது எண்ணங்கள், செயல்கள் மற்றும் உணர்வுகள் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன?” போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டும். பண்டைய மக்களுக்கும் நவீன மக்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை கணக்கில் எடுத்துக்கொள்வதன் மூலம், நம் சொந்த வாழ்க்கையின் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வேதத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

வேதாகமத்தின் ஆதி மற்றும் நவீன வாசகர்களுக்கு இடையிலான சகாப்த, கலாச்சார மற்றும் தனிப்பட்ட முன்னேற்றங்களை அடையாளம் காண்பது நம் காலத்திற்கு வேதத்தைப் பயன்படுத்துவதற்கான மிகவும் சவாலான அம்சங்களாக இருக்கலாம். ஆனால் நாம் அதைக் கவனமாகச் செய்தால், அது தேவனை மதிக்கிற மற்றவர்களுக்குப் பொறுப்பான மற்றும் நம் நேரத்திற்கு ஏற்ற வழிகளில் வேதவசனங்களைப் பயன்படுத்த நமக்கு உதவும்.

# முடிவுரை

வேதாகமத்தைப் பயன்படுத்துவது குறித்த இந்தப் பாடத்தில், வேதத்தின் மூல அர்த்தத்தை நமது நவீன சூழ்நிலைகளுடன் இணைக்க உதவும் மூன்று அடிப்படை காரணிகளை நாம் ஆராய்ந்தோம். வேதாகமத்தின் நவீன பயன்பாடுகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி நாம் பேசினோம். வேதாகமத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைத் தீர்மானிக்க உதவும் ஆதி மற்றும் நவீன வாசகர்களுக்கு இடையிலான தொடர்புகளைப் பற்றி நாம் விவாதித்தோம். வேதாகமம் எழுதப்பட்ட நாட்களிலிருந்து நிகழ்ந்த சில முன்னேற்றங்களை நாம் பரிசீலித்துள்ளோம், தற்கால வாசகர்களுக்கு நமது பயன்பாடுகளை மாற்றியமைக்க இந்த வளர்ச்சிகள் நம்மை கட்டாயப்படுத்தும் வழிகளில் குறிப்பாக கவனம் செலுத்துகிறோம்.

வேதாகமங்கள் பிற்கால சந்ததியினரால் ஒதுக்கி வைக்கப்படுவதற்காக எழுதப்படவில்லை என்பதை நாம் எப்போதும் நினைவூட்ட வேண்டும். மாறாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவை தேவனுடைய மக்கள் வரலாறு முழுவதிலும் நேசிக்கவும் கீழ்ப்படியவும் எழுதப்பட்டவை. இந்த காரணத்திற்காக, வேதம் முதன்முதலில் எழுதப்பட்டபோது என்ன நோக்கம் இருந்ததோ, நம் காலத்திலும் அதே நோக்கம் இருக்கிறது. வேதாகம நாட்களுக்கும் நமது சொந்த நாட்களுக்கும் இடையில் நடந்த வளர்ச்சிகளை நாம் மதிப்பிட வேண்டும், ஆனால் நாம் அவ்வாறு செய்யும்போது, கடந்த காலத்தில் வாழ்ந்த மக்களுக்கான தேவனுடைய சித்தத்தை மட்டுமல்ல, இன்று வாழும் அவரது மக்களுக்கான அவரது சித்தத்தையும் அறிந்துகொள்ள முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.